கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I – 2005/2006(வெளிவாரி)
(பெப்ரவரி/மார்ச் 2008)

LIBRARY
30 MAY 2008
Eastern University, Sri Lanka

# ECO 201 நுண்பாகப் பொருளியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

01. A என்னும் நுகர்வோன் ஒருவன் கொள்வனவு செய்கின்ற X, Y என்கின்ற இரு வேறுபட்ட பொருட்களது மொத்தப் பயன் சார்புகள் பின்வருமாறு தரப்படுகின்றன:

$$Tux = 240x - 10x^2$$
$$TUy = 320y - 20y^2$$

A என்பவரது மாதாந்த செலவிடத்தக்க வருமானம் 4400 ரூபாவாகும். X என்னும் பொருளில் ஓர் அலகினை 20 ரூபாவிற்கும் y என்னும் பொருளை 40 ரூபாவிற்கும் A கொள்வனவு செய்கின்றார்.

(i) A என்பவர் தனது செலவிடத்தக்க வருமானம் முழுவதையும் x,y ஆகிய பொருட்களின் கொள்வனவில் செலவிடுவார் எனில், உச்சப்பயனை பெறும் நிலையில் நுகர்வோனின் இரு பொருட்களினதும் கொள்வனவு சேர்க்கை என்ன?

(ii) x எனும் பண்டத்தின் விலை 50% ஆல் குறைவடையும் எனின் y யினது விலை மாறாதபோது புதிய உச்சப்பயன் கொள்வனவுச் சோர்க்கை என்ன?

(iii) x எனும் பண்டத்திற்கான கேள்விக் கோட்டினைப் பெறுக?

(20 புள்ளிகள்)

02. (அ) உபேட்சை வளைகோடுகள் (Indiffence curve) என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) உபேட்சை வளைகோடு ஒன்றின் பிரதான இயல்புகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) உபேட்சை வளைகோட்டு ஆய்வின்படி நுகர்வோன் சமநிலை எவ்வாறு விளக்கப்படலாம்?

(08 புள்ளிகள்)

03. (அ) நிலையான செலவுகளையும், மாறும் செலவுகளையும் உதாரணம் தந்து வேறுபடுத்துக?

(05 புள்ளிகள்)

(ஆ) குறுங்கால சராசரி, எல்லைச் செலுவுக் கோடுகளை வரைந்து அவற்றின் வடிவங்களுக்கான காரணங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) C = 190 + 53Q இங்கு C = மொத்தச் செலவு, Q = மொத்த வெளியீடு மேற்காட்டிய செலவுத் தொழிற்பாட்டின் அடிப்படையில் நிறுவனம் 100 அலகு பொருட்களை உற்பத்தி செய்தால் அதன் சராசரிச் செலவு எவ்வளவு?

(05 புள்ளிகள்)

LIBRARY
30 MAY 2023
University, Sri

04. (அ) நிறைபோட்டிச் சந்தை ஒன்றின் பிரதான இயல்புகளை விளக்குக?

(06 புள்ளிகள்)

(ஆ) "ஒரு நிறைபோட்டி உற்பத்தியாளன் குறுங்காலத்தில் தனது உற்பத்தியை தொடர்ந்து நடத்துவதா அல்லது நிறுத்துவதா என்பதனைத் தீர்மானிப்பதில் தனது நிறுவனத்தின் சராசரி மாறும் செலவை (AVC) கருத்திற்கொள்வான்". பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி இக்கூற்றை விளக்குக.

(14 புள்ளிகள்)

05. (அ) ஒரு தொழிலானது எவ்வாறு ஒரு தனியுரிமை அமைப்பாக மாறுகின்றது?

(04 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமையில் விலைபேதப்படுத்தல் இடம்பெறத் தேவையான அடிப்படை நிபந்தனைகள் எவை?

(08 புள்ளிகள்)

(இ) விலை பேதப்படுத்தலின்போது தனியுரிமையாளனால் கடைப் பிடிக்கப்படும் மூன்று வேறுபட்ட நிலைகளை உதாரணம் தந்து விளக்குக?

(08 புள்ளிகள்)

06. (அ) சம நோக்குக்கோட்டு ஆய்வில் எல்லைப் பதலீட்டு வீதம் (MRS) என்பதனை வரைபட உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) பதலீட்டு விளைவு, வருமான விளைவு என்பவற்றை ஹிக்சியன் மாதிரியினை பயன்படுத்தி விளக்குக?

(12 புள்ளிகள்)

07. (அ) குறுங்கால உற்பத்தி கோட்பாட்டிற்கும் நீண்டகால உற்பத்திக் கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(ஆ) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியை வரைபடங்களுடன் விளக்குக?

(12 புள்ளிகள்)

08. கீழ்வருவன பற்றி சிறுகுறிப்பு வரைக.

(அ) உற்பத்தி விரிவுப் பாதை
(ஆ) நவீன செலவுக் கோட்பாடு
(இ) வரவு செலவுத் திட்டக் கோடு
(ஈ) அளவுத் திட்ட விளைவு விதிகள்

(04 x 05 20 புள்ளிகள்)